**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 147/2024**

**Deposition of P.W.** 6

Name : திரு. கிங்சிலி பெலிக்ஸ்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated: 21.01.2026

A1, A2 absent. Petition filed and allowed.

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது தக்கலை காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். 11.03.2016ம் தேதி 12.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருக்கும் போது திருவனந்தபுரம் நெய்யாற்றின்கரை ஊரை சேர்ந்த மோகனகுமார் என்பவர் மகன் விஷ்னு என்பவர் கொடுத்த புகார்மனுவை பெற்று மனுவின் தன்மை படி நிலைய குற்ற எண்.210/2016 பிரிவுகள் 3(i) தமிழ்நாடு பொது சொத்துக்களை சேதப்படுத்துவதை தடுக்கும் சட்டப்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல்அறிக்கை அ.சா.ஆ.3. அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பி விட்டு இதர நகல்களை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிர்கள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

ஆய்வாளர் என்னை 11.03.2016ம் தேதி விசாரித்தார். ஆய்வாளர் என்னை 31.03.2016ம் தேதி விசாரித்துள்ளார் என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில் காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த அன்றே புகார் காவல்நிலையத்திற்கு கிடைத்து விட்டது. சம்பவத்திற்கு மறுநாள் தான் புகார் கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு 11.03.2016ம் தேதி புகார் கிடைத்தது. 10.03.2016ம் தேதி காவல்நிலையத்தில் கொடுத்த புகார்மனு மறைக்கப்பட்டு பின்னர் எதிரிகளை பொறுத்தும், சாட்சிகளை பொறுத்தும் அபிவிருத்தி செய்யப்பட்ட புதிய புகார்மனு உருவாக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.